**இராமநாதபுரம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

(08-11-2015 – 11-11-2015)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 06-11-2015

**கடந்த கால வானிலை 03-11-2015 முதல் 05-11-2015 வரை**

| **காரணிகள்** | **கடந்த கால வானிலை** |
|---|---|
| மழை (மி.மீ) | 31.9 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 30-32 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 24-25 |
| மேக மூட்டம் | 4-8 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 86-93 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 0-4 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 11-11-2015 - 8.30 மணி நேரம் வரை**

| **காரணிகள்** | **07.11.15** | **08.11.15** | **09.11.15** | **10.11.15** | **11.11.15** |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 26 | 20 | 28 | 14 | 12 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 32 | 32 | 32 | 32 | 32 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 23 | 23 | 23 | 23 | 23 |
| மேக மூட்டம் | 7 | 7 | 7 | 7 | 7 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 92 | 92 | 92 | 92 | 90 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 88 | 88 |
| காற்றின் வேகம் (கி.மீ / மணி ) | 3 | 3 | 3 | 3 | 3 |
| காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

**குறுஞ்செய்தி :**

வரும் ஐந்து நாட்களுக்கு மிதமான மழை அனைத்து இடங்களிலும் வர வாய்ப்புள்ளது. வானம் மேகமூட்டத்துடன் குளிர்ந்தும் காணப்படும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல், பருத்தி மற்றும் பருப்பு வகைகள்**

**பருவம்: நெல்- தூர் கட்டும் நிலை, பருத்தி- வளர்ச்சி பருவம்**

- விவசாயிகள் விளை நிலத்தில் ஒரு பகுதியை மட்டும் மழை நீரை சேமித்து வைப்பதற்கு முறையான ஏற்பாடுகள் செய்ய அறிவுறுத்தப்படுகின்றன. ஏனெனில் இந்த மழை நீரை பயன்படுத்தி வறட்சி காலங்களில் பயிர்களுக்கு பாசனம் செய்யவதற்குப் பயன்படுத்த முடியும்.
- பின் சம்பா பருவத்தில் நேரடி விதைப்பில் விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் முலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.
- மாவுப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்ப எண்ணை 2% அல்லது வேப்பங்கொட்டை சாறு 5% அல்லது தையோமீத்தாகசம் 25 WG லிட்டருக்கு 0.6 கிராம் என்ற அளவில் பயன்படுத்தவும்.
- பருத்தியில் இலைப்பேன் மற்றும் சாறு உண்ணும் பூச்சினைக் கட்டுப்படுத்த Imidacloprid 200SL 100ml/ha தண்ணிரில் கலந்து தெளிக்கவும்.
- பருத்தியில் வெள்ளை ஈக்கள் மற்றும் தத்துப்பூச்சிகள் தாக்கத்தைக் கட்டுப்படுத்த Imidacloprid 17.8 % @ 5 ml or Thiomethoxam 6 g 10 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கவும்.